




# Orientation to Ontario

## முதியே◌ார் துஷ்பிரயே◌ாகம்

1-855-626-0002
orientationontario.ca/en





வயது முதிர்ந்தே◌ார் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களிலும் பராமரிப்பாளர்களிலும் தங்கியிருக்க வேண்டும். ஒரு வயது முதிர்ந்தவர் அவருக்கு நெருக்கமான ஒருவரால் தவறாக நடத்தப்படும் அல்லது புறக்கணிக்கப்படும் பே◌ாது முதியே◌ார் துஷ்பிரயே◌ாகம் நிகழ்கிறது. குடும்ப உறுப்பினர்கள் அல்லது குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்கள் வயது முதிர்ந்தவர்களைத் துஷ்பிரயே◌ாகம் செய்ய முடியும். முதியே◌ார் துஷ்பிரயே◌ாகம் உடல் ரீதியாக, உணர்ச்சி ரீதியாக, பாலியல் ரீதியாக அல்லது நிதி ரீதியாக இருக்க முடியும், மேலும் அது புறக்கணிப்பையும் உள்ளடக்குகிறது.

உடல் ரீதியான துஷ்பிரயே◌ாகத்தில் தீங்கை அல்லது துயரத்தை ஏற்படுத்தும் எந்தவெ◌ாரு செயலும் உள்ளடங்க முடியும்:

- அறைதல், அடித்தல், தள்ளுதல், குலுக்குதல், மூர்க்கமாகத் தள்ளுதல் அல்லது கட்டுப்படுத்துதல்
- அவசியமற்ற உடல் ரீதியான கட்டுப்படுத்தல்கள்
- மருந்தை நிறுத்துதல் அல்லது ஒருவருக்கு அதிக மருந்தை வழங்குதல்
- உணவை நிறுத்தி வைத்தல் அல்லது சரியான உணவு வகைகளை வழங்காமல் இருத்தல்
- பலவந்தமாக உணவளித்தல் அல்லது பலவந்தமாக மருந்தளித்தல்

உணர்ச்சி ரீதியான அல்லது உளவியல் ரீதியான துஷ்பிரயே◌ாகம் நடத்தைகளின் பல வகைகளை உள்ளடக்குகின்றன:

- ஒருவரைத் தன்வழிக்குக் கெ◌ாண்டுவர அச்சுறுத்தல்களை அல்லது பயத்தைப் பயன்படுத்தல்
- ஒருவரை அவருடைய நண்பர்களை அல்லது குடும்ப உறுப்பினர்களைப் பார்க்கவிடாமல் தடுப்பது
- தீர்மானங்களை எடுக்க ஒருவருக்கு இடமளிக்காதது அல்லது அவரை ஒரு குழந்தையைப் பே◌ால நடத்துவது
- ஒருவரை வெளியேற்றுவதாக அச்சுறுத்தல் அல்லது அவரை ஒரு நலம்பேண் மனைக்கு மாற்றுதல்
- நினைவாற்றல் இழப்பை அல்லது டிமென்ஷியாவை அனுபவிக்கும் ஒருவரைத் தன்வழிக்குக் கெ◌ாண்டுவருதல்.

பாலியல் துஷ்பிரயே◌ாகமும் ஒரு வகையான முதியே◌ார் துஷ்பிரயே◌ாகமாகும். பாலியல் துஷ்பிரயே◌ாகம் என்பது எந்தவெ◌ாரு தேவையற்ற பாலியல் ரீதியான முன்நகர்வை அல்லது நடத்தையை உள்ளடக்குகிறது. நலம்பேண் மனைகளில் உள்ள முதியவர்கள், அந்த நலம்பேண் மனையில்

Funded by/Financé par :

Immigration, Refugees and Citizenship Canada | Immigration, Réfugiés et Citoyenneté Canada

Ontario

உள்ள ஊழியர்களுடன் பாலியல் நடவடிக்கைக்கு சட்டபூர்வமாகச் சம்மதிக்க முடியாது.

நிதிசார் துஷ்பிரயோகம்

நிதிசார் துஷ்பிரயோகம் என்பது முதியோர் துஷ்பிரயோகத்தின் மிகவும் பொதுவான வகைகளில் ஒன்றாகும், மேலும் பலவிதமான செயல்கள் அல்லது நடத்தைகள் இதில் அடங்கும்:

- ஒரு முதியவருக்குத் தனது சொந்த நிதியைக் கட்டுப்படுத்த அனுமதிக்காதிருத்தல்
- ஒரு முதியவரை உங்களுக்கு பணம் தரும் விதத்தில் கையாளுதல்
- ஒரு முதியவரின் அனுமதியின்றி அவரின் உடைமைகளை விற்றல்
- ஒரு முதியவருக்காக நீங்கள் நிர்வகிக்கும் நிதியை நிறுத்தி வைத்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல்
- பயமுறுத்தல்கள் அல்லது மிரட்டல்கள் மூலம் ஒருவரின் விருப்பத்தை மாற்றும்படி கட்டாயப்படுத்துதல்
- ஒருவரின் பெயரில் உள்ள ஆவணங்களை இன்னொருவரின் பெயரில் போலியாகத் தயாரித்தல்

புறக்கணிப்பு என்பது முதியோர் துஷ்பிரயோகத்தின் பொதுவான ஒரு வடிவமாகும், மேலும் இது உடல் ரீதியான, உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகச் செயல்களை உள்ளடக்கியது. பராமரிப்பாளர்கள் முதியோர்களின் உடல், மருத்துவ அல்லது உணர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யாதபோது, அவர்கள் முதியோர் துஷ்பிரயோகம் புரிகின்றனர்.

முதியோர் தமது குடும்பத்தினரிலும் பராமரிப்பாளர்களிலும் தங்கியிருப்பதால், அவர்கள் துஷ்பிரயோகத்தைத் தெரிவிப்பதற்குப் பெரும்பாலும் பயப்படுகின்றனர்.

உதவியை நாடுதல்

முதியோர் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உதவிக்காக Senior Safety Line (சிரேஷ்டமானவர் பாதுகாப்பு அழைப்பு) ஐ 1-866-299-1011 இல் அழைக்க முடியும்.

நீங்கள் முதியோர் துஷ்பிரயோகத்தைச் சந்தேகித்தால், உங்களுக்கு பொலிசாருக்குத் தெரிவிக்க முடியும். பொலிசார் விசாரணை செய்து பாதிக்கப்பட்டவருக்கு உதவுவர். இருப்பினும், முதியோர் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வயது வந்தவர்கள் என்பதால், அவர்களுக்கு அந்த உதவியை மறுக்க முடியும்.

பாதிக்கப்பட்டவர் ஒரு நலம்பேண் மனையில் அல்லது வேறொரு சுகாதாரப் பராமரிப்பு வசதியில் இருந்தாலே ஒழிய, முதியோர் துஷ்பிரயோகத்தைத் தெரிவிப்பது சட்டத்தால் கட்டாயமானதல்ல.



